# தேவன் பொல்லாங்கைப் படைத்தாரா?

தேவன் இரக்கமும் நன்மையும் உள்ளவர், மற்றும் பொல்லாங்கு எதையும் கொண்டிராதவர் என்று சிந்தித்து (தக்க வகையில் இவ்வாறு) வளரப் பழக்கப்பட்டுள்ள ஒருவர் வேதாகமத்தின் பின்வரும் வசனப் பகுதியை வாசித்தால் அதிர்ச்சியடையலாம்: "ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்" (ஏசா. 45:7).[1]

பொல்லாங்கின் இருத்தலானது, தேவன் நன்மையிலோ அல்லது வல்லமையிலோ குறைவுபடுகின்றார் என்று காண்பிப்பதாக டேவிட் ஹியூம் விவாதித்தார். பழங்கால ஏதேன்ஸ் தத்துவ ஞானியான எப்பிக்யூரஸ் பின்வரும் வினாக்களை எழுப்பினார்:

> அவர் பொல்லாங்கினைத் தடை செய்ய விரும்பியும் இயலாமல் இருக்கின்றாரா? என்றால் அவர் சக்தியற்றவராய் இருக்கின்றார். அவரால் அதைச் செய்ய முடிந்தும் விரும்பாமல் இருக்கின்றாரா? என்றால் அவர் தீய எண்ணம் கொண்டவராய் இருக்கின்றார். அவரால் அதைச் செய்ய முடிந்து மற்றும் விருப்பமுள்ளவராய் இருக்கின்றாரா? என்றால் பொல்லாங்கு ஏன் இருக்கின்றது?[2]

இது எல்லா உண்மைகளைப் பற்றியுமான அறிவைக் கற்பனையாய் யூகிக்கின்ற தவறான எண்ணம் கொண்ட விவாதமாயிருப்பினும், பொல்லாங்கின் மிகப் பெரிய பிரச்சனையுடன் உண்மை நிறைந்த தனிநபர்கள் பலர் மல்யுத்தம் செய்துள்ளனர். மனிதனால் இதற்கு ஒரு முழுமையான விடை கூற முடியவில்லை, ஆனால் வேதாகம வெளிப் பாடுகள் சில விடைகளைக் கொடுப்பதுடன் நடைமுறைத் தீர்வையும் தருகின்றன.

## ஒழுக்க ரீதியான பொல்லாங்கிற்குத் தேவன் காரணர் அல்ல

ஒன்றிற்கு மேற்பட்ட வகையில் பொல்லாங்கு உள்ளதென்று வேதாகமம் காண்பிக்கின்றது. (கொலை போன்ற) ஒழுக்க ரீதியான பொல்லாங்கு என்பது "சுத்தமுள்ளவராய் இருக்கின்ற" (1 யோவா. 3:3) ஒருவருக்கு முற்றிலும் அந்நியமாய் உள்ளது. நமது தேவன், "... நியாயக்

கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்'' (உபா. 32:4). ஏவப்பட்டவரான யாக்கோபு, "... தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல'' (யாக். 1:13) என்று உறுதிப்படக் கூறினார். தேவன் ''அன்பின்'' உருவாயிருந்தால் (1 யோவா. 4:8), அவர் பொல்லாங்கைக் கொண்டிருத்தல் என்பது முடியாத செயல் ஆகும். எனவே ஒழுக்க ரீதியான பொல்லாங்கு என்பது தேவனுக்கு அப்பால் உள்ளது.

## கீழ்ப்படியாமைக்குத் தண்டனை என்ற வகையில் வரும் பொல்லாங்கிற்குத் தேவன் காரணராக இருக்கின்றார்

எந்த ஒழுக்க ரீதியான பொல்லாங்கிற்கு அப்பாலும், "சிட்சையின் பொல்லாங்கு" என்று விவரிக்கப்படக் கூடிய பொல்லாங்கும் இருக்கின்றது. அதைப் பொறுத்தமட்டில் தேவனே அதை எழுதியவர் மற்றும் படைத்தவர் என்று உரிமைகோருகின்றார்.

தொடக்க காலத்தில் அவருடைய கிரியை ஒவ்வொன்றும் "மிகவும் நல்லதாயிருக்க'' (ஆதி. 1:31)[3], ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாமல் போனபோது தேவன் தம்முடைய நல்ல உலகத்தைச் சபிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். அதன் பிறகே, முள்ளுகளும், களைகளும், வீண் உழைப்பும், வேதனையும், வியாதிகளும், ஒட்டுண்ணிகளும், பஞ்சங்களும், சூறாவளிகளும் மற்றும் பூகம்பங்களும் வந்தன. தேவன் தம்முடைய மாபெரும் ஞானத்தில், ஆதாமின் பின் சந்ததிக்குக் கீழ்ப்படியாமைக்கு மரணத்தை ஒரு தண்டனையாக நியமித்தார் (ஆதி. 3:17, 18), "அப்படியிருந்தும், மரணமானது ... ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ் செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது ..." (ரோமர் 5:14). தகப்பனும் மகனும் ஒருவர் மற்றவரின் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளலாம், ஆனால் குற்றம் என்பது உறிஞ்சப்படுவதில்லை (எசே. 18:20). பாவத்தின் விளைவானது மாற்றப்படலாம் (யாத். 20:5), ஆனால் அக்கிரமம் அவ்வாறு மாற்றப்படுவதில்லை (ரோமர் 14:12).

பின்னாளில் பழைய ஏற்பாட்டு வரலாற்றில், தேவன் ஒரு பொல்லாங்கான நகரைத் தரையில் விழச் செய்வதற்கு விரோதிகளை அனுப்பிய பொழுது, அது பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு சிட்சையாய் இருந்தது. ஆமோஸ் 3:6 வசனமானது, ''ஊரில் எக்காளம் ஊதினால், ஜனங்கள் கலங்காதிருப்பார்களோ? கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?" என்று கூறுகின்றது. தண்டனை என்று விவரிக்கப்பட்ட பொல்லாங்கே எருசலேம் நகருக்கு ஏற்பட்டதாக எரேமியா உறுதிப்படுத்தினார்: "இதோ, தீங்கைக் கட்டளையிட நான் என் நாமம் தரிப்பிக்கப்பட்ட நகரத்திலே துவக்கும்போது, நீங்கள் தண்டனைக்குத் தப்புவீர்களோ? நீங்கள் தப்புவதில்லை ..." (எரே. 25:29).

பட்டயமும், பஞ்சமும் மற்றும் அழிவும் தேவனுடைய ஒழுங்கு

படுத்தும் பொல்லாங்கிற்கு எடுத்துக்காட்டுக்களாய் உள்ளன. “இதோ, நான் அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கே ஜாக்கிரதையாயிருப்பேன் ...” (எரே. 44:27) என்று நாம் வாசிக்கின்றோம்; “... நான் இந்த வம்சத்தாருக்கு விரோதமாய்த் தீமையை வருவிக்க நினைக்கிறேன்; அதினின்று நீங்கள் கழுத்தை நீக்க மாட்டீர்கள், நீங்கள் மேட்டிமையாய் நடப்பதில்லை; அது தீமையான காலம்” (மீகா. 2:3).

ஏசாயா 45:7ன் சந்தர்ப்பப் பொருளானது, இன்னும் பிறவாதிருந்த கோரஸ் என்ற பெர்சிய அரசனுக்கு அவனுக்கு முன் உள்ள அரசுகளைக் கீழ்ப்படுத்தும்படி அணிவகுத்துச் செல்லுமாறு பரலோகத்திலிருந்து வந்த கட்டளையைச் சுட்டிக்காட்டுகின்றது. பல நாடுகளின்மேல் தேவன் சிட்சையின் பொல்லாங்கை அனுப்புவார், மற்றும் கோரஸ் என்பவன் பரலோகத்தின் கருவியாய் இருப்பான் என்று அது உணர்த்திற்று.

ஆகையால், தவறான செயல் எதிலும் தேவன் ஈடுபடாதிருக்க, பரிசுத்தமான சிட்சித்தலில் அவர் “பொல்லாங்கைப் படைக்கின்றார்.”

## நல்லொழுக்க அளவை என்ற வகையில் பொல்லாங்கிற்குத் தேவன் காரணராயிருக்கின்றார்

தேவனின் விதிகளை (இயற்கையான அல்லது வெளிப்படுத்தப் பட்டவைகளை) மீறாது இருக்கின்ற, ஆனால் தாங்கள் விதையாதிருக் கின்றதை அறுக்கிற (கலா. 6:7) மக்கள் உள்ளனர்; அதாவது, இவர்கள் பல வகையான துன்பங்களினால் உபத்திரவப்படுகின்றனர். யோபு தனது கொப்புளங்களைப் பெற்றுக் கொள்ளும்படியான ஒரு செயலும் செய்திருந்ததில்லை, ஆனால் - அவருக்கு தெரியாமலேயே - அந்தப் புண்களை அனுமதித்ததில் தேவன் அருளிரக்கமுள்ள ஒரு நோக்கம் கொண்டிருந்தார். யோபு நல்லவராக இருந்த அளவுக்கு, தேவனைச் சபிக்க மறுத்திருந்தார் (யோபு 2:9, 10) மற்றும் பொறுமையின் அளவைப் பயன்படுத்தியிருந்தார் (யாக். 5:11), தேவன் இன்னமும் அவரிடத்தில் (யோபினிடத்தில்) தற்புகழ்ச்சியின் ஒரு ஆவியையும் மற்றும் கலகம் செய்தலையும் (யோபு 13:2, 3; 23:2 ஆகியவற்றைக் காணவும்), பொறுமைக் குறைவையும் (யோபு 21:4) காண முடிந்தது. அவர் நெறித்துப் பார்க்கும் கண்களையும் (யோபு 15:12) மற்றும், தம்மைப் படைத்தவருடன் வழக்காடும் ஒரு இயல்பையும் கொண்டிருந்தார் (யோபு 13:3). துன்பத்தின் நாட்கள் மனிதனைத் (யோபுவை) தாழ்மைப் படுத்தின. அவர் தேவனு டைய கடிந்து கொள்ளுதலைக் கவனித்த பொழுது, அவர் “தூளிலும் சாம்பலிலுமிருந்து” மனஸ்தாபப்பட்டார் (யோபு 42:6). அவர் தனது ஒழுங்குபடுத்தும் பொல்லாங்கினால், வேறு எவ்வகையிலும் ஒருபோதும் ஆகியிருக்க முடியாத அளவுக்கு மிக மேன்மையான மனிதரானார்.

பவுலும் கூட “மாம்சத்தில் ஒரு முள்” (2 கொரி. 12:7) எனப்பட்ட அவரது துன்புறுத்தும் வேதனைக்குக் காரணமான ஏதொன்றையும்

*செய்திருந்ததில்லை, அது அவரை மிகவும் துன்புறுத்திற்று. அவர் விடுபடு வதற்காக ஜெபித்தார், ஆனால் அந்தக் கூர்மையான வேதனையைத் தேவன், பவுலைத் தாழ்மைப் படுத்துவதற்காக அனுமதித்திருப்பார் என்பதை அவர் அறியாதிருந்தார். இந்த முள்ளின் காரணமாக தேவனைச் சபிப்பதற்குப் பதிலாக, பவுல் தமது பிதாவானவர் அவரை (பவுலை) அந்த அளவுக்கு அன்புகூர்ந்தமைக்காக நன்றி செலுத்தினார், மற்றும் அவர் ''நான் பலவீனமாயிருக்கும் பொழுதே பலமுள்ளவனாயிருக்கிறேன்'' (2 கொரி. 12:10) என்று உணர்ந்தறியத் தலைப்பட்டார். எபி. 12:11 வசனமானது, "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" என்று கூறுகின்றது.*

*இயேசுவும் கூட உபத்திரவங்களின் மூலம் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அவரும் கூட விடுவித்தலுக்காக ஜெபித்தார். இருப்பினும் அவர் பூரணராவதற்காக அவருக்கு அந்த சிட்சை தேவைப் பட்டதைத் தேவன் காண முடிந்தது (எபி. 5:7-9).*

## பிறருக்காக அனுபவிக்கும் பொல்லாங்கிற்குத் தேவன் காரணராயிருக்கின்றார்

*இயேசுவுக்கு வந்த கோரமான பாடுகளில், அவரது சுய பூரணப் படுத்துதல் தவிர இன்னொரு நோக்கம் இருந்தது. அதில், ''அவர் … அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து'' (ஏசா. 53:12) "நமக்காகப் பாவமாக்" (2 கொரி. 5:21)கப்பட்டார். அவர் பிறருக்காகத் துன்பப்பட்டார்.*

*ஒரு மனிதர் தனது பாவத்தினால் அல்ல, ஆனால் தனது பெற்றோரின் பாவத்தினால் (சில வேளைகளில் பெற்றோரின் பாவங்கள் காரணமா யிருக்கின்றன) பார்வையற்றவராய்ப் பிறந்தார், அவரது சொந்தப் பாவங் களினால் அப்படியாகவில்லை (சில வேளைகளில் ஒரு நபர் தனது சொந்தப் பார்வையற்ற தன்மைக்கு தானே காரணமாகின்றார்). இந்த மனிதரின் பார்வையற்ற தன்மையானது அருளிரக்கம் கொண்ட நோக்கமொன்றைக் கொண்டிருந்தது (யோவா. 9:1-3). ''அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்'' (ரோமர் 11:33). தேவனுடைய சிந்தனையானது வெளிப்படுத்தப் படுகையில் மனிதர்கள் நிலையாகத் திகைத்து நிற்கின்றனர்.*

## முடிவுரை

*ஒருவர் எல்லா விடைகளையும் பெற்றிராத வரைக்கும், அவர் இன்னமும், "வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி" (அப். 14:17) வருகின்ற மற்றும் நன்மை செய்கின்ற வரான ஒரு தேவனைக் குற்றம் சாட்டத் தயாராக இருப்பதில்லை. விசுவாசம் என்பது உறுதியானவைகளின்மேல் அஸ்திபாரம் இடப்*

*பட்டதாக உள்ளது (எபி. 11:1), ஆனால் எப்பொழுதுமே விசுவாசத்தில் நம்பிக்கையின் கூறானது உள்ளது. விசுவாசமானது முற்றிலும் செயல் விளக்கப்படுத்தப் படுமேயானால், அது விசுவாசமாக இருக்காது. நல்லதொரு தேவனுக்கான ஆதாரமானது அவரின் எதிரிடைக்கு உள்ளதை விட மிகவும் ஏராளமாயுள்ளது (சங். 40:5ஐக் காணவும்). எனவே, இந்த எல்லா ஆதாரத்தையும் கருத்தில் கொள்ளுகின்ற நேர்மையான ஒரு மனிதர், அறிக்கையிட்டு ''விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்'' (மாற். 9:24) என்று ஜெபிக்க வேண்டிய தாகின்றது. இறுமாப்புடைய எண்ணப்போக்கானது (ரோமர் 9:20ஐக் காணவும்) ஒருக்காலும் ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதில்லை, ஆனால் எப்பொழுதும் அது சுய பாதிப்பையும் மகிழ்ச்சியின்மையையுமே விளைவிக் கின்றது. பொல்லாங்கின் பிரச்சனைகள் முற்றிலுமாய்த் தீர்க்க முடியாத வைகளாகத் தோன்றும் பொழுது, ஒருவருடைய வாழ்வில் இடர்ப்பாடுகள் வரும் பொழுது, கர்த்தரின்மேல் அன்புகூர்ந்து அவரைத் தொடர்ந்து நம்புகின்ற மனிதர் மகிழ்வுடன் இருக்கின்றார். நம்மால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் கூட, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்ட வர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" (ரோமர் 8:28).*

---

*குறிப்புகள்*

[1]NASB*யில்* "evil" *என்பதற்கு மாறாக* "calamity" *என்றுள்ளது.* [2]David Hume, "Dialogues Concerning Natural Religion," in *Hume Selections*, ed. Charles W. Hendel Jr. (New York: Charles Scribner's Sons, 1955), 365. [3]*எல்லாம் "மிகவும் நன்றாயிருந்த" காலத்தில் பொல்லாங்கு இருந்ததில்லை; ஆனால் பாவம் வந்த பொழுது, தேவன், தண்டனையாகத் "தீங்கையும் உண்டாக்குகிறவர்" (ஏசா. 45:7) என்று கூறினார். எரே. 25:29; 44:27; மீகா 1:12; 2:3; சங். 125:4, 5; ஏசா. 31:2; தானி. 9:14 ஆகியவற்றையும் காணவும்.*